# சங்க இலக்கியங்களில் வாழ்வியல் அறங்கள்

*திருமதி. ப. வள்ளிநாயகி*
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
காமராஜ் மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.5281/zenodo.14958669

## *முன்னுரை*

*இலக்கியம் என்பது வாழ்வின் வெளிப்பாடு. இலக்கியத்தின் வழியாக வெளிப்படும் வாழ்வானது சமூகத்தின் நிலையையும் ஒருங்கே கொண்டது. சங்க இலக்கியத்தில் இவ்விரண்டும் பொதிந்துள்ளது. இந்த அறங்கள் கடந்த கால வாழ்வின் அனுபவமாகவும், நிகழ்கால வாழ்வின் சாட்சியாகவும், எதிர்கால வாழ்விற்கான ஆலோசனையாகவும் இருக்கின்றன. மக்களின் உயர்ந்த பண்பானது அறம் சார்ந்த வாழ்வியல் முறையால் வெளிப்படும் நாம் செய்யும் அறங்களே நம்மை பாதுகாக்கும் அரணாக அமைகிறது. இலக்கியம் என்பது கடந்த காலத்தை மட்டுமல்ல, நிகழ்காலத்திற்கும் அர்த்தம் கொடுக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். அவ்வகையில் நம் முன்னோர்கள் கடைபிடித்த அறங்களை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம். சங்க இலக்கியங்கள் நம் முன்னோர்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்கள் கடைப்பிடித்த நெறிமுறைகளையும், அரசியல் பண்பாடுகளை நமக்கு தெற்றன காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது. சங்க இலக்கியங்களை இயற்றிய புலவர்கள் காதலையும், வீரத்தையும் எடுத்துரைத்தனர். அதன் அடிப்படையில்சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ள அறக்கருத்துக்களை ஆராய்கிறது இக்கட்டுரை.*

## *அறம்*

*அறத்தை சங்ககால சான்றோர்கள் ஒரு கொள்கையாகவோ, கோட்பாடாகவோ, சமயமாகவோ கருதவில்லை. இதனை அவர்கள் வாழ்ககை நெறியாகவே கருதிப் போற்றினர். உள்ளத்தாலும், உரையாலும், செயலாலும் நன்மை செய்வதையே அறத்தின் பொதுநிலை எனக் கொண்டு முன்னோர்கள் செயல்பட்டனர். அறம் என்பதற்கு தர்மம், கடமை, ஒழுக்கநெறி, நல்லொழுக்கம், நல்வினை, புண்ணியம், ஞானம், தியானம், நோன்பு என்று பல பொருள்கள் உண்டு. எனவே வாழ்விற்குத் தேவையான நற்பண்புகள், உயர்கருத்துகள், சிறப்பு சிந்தனைகள் இவையாவும் அறம் என்பதில் அடங்குகின்றன.*

## *விருந்தோம்பல் அறம்*

*இல்லறத்திற்குரிய அறங்களுள் ஒன்று விருந்தோம்பல் பண்பு. தமிழர்க்குரிய பண்பாடுகளில் சிறந்ததாக கருதப்படுவது விருந்தோம்பல் பண்பாகும். இப்பண்பினைத் தமிழ் மக்கள் தம் கடமையாகக் கொண்டு வாழ்ந்தனர்.*

நம் இல்லம் தேடி வரும் விருந்தினர்களை அன்புடன் வரவேற்று உபசரிப்பது தழிழர் பண்பாடாகும். அகம் மகிழ மனமுவந்து அமுது படைப்பதை கடமையாகப் போற்றுவது இல்லறத்தார் கடனாகும். தன்னை வாடி வருபவரை வரவேற்று அவர் மகிழ நாம் விருந்தளிக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

**"துயர்அறு கிளவியோடு : அயர்ந்தீகம் விருந்தே"**

***(கலித்தொகை, பாலைக்கலி: 3 ஃ 1 ஃ 9)***

எனவரும் கலித்தொகைப் பாடல்வரி விருந்தோம்பல் பண்கை எடுத்துக் காட்டுகிறது.

நம் இல்லம் தேடி வரும் விருந்தினர் எத்தனை முறை விருந்திற்கு வந்தாலும் முதல் தடைவ வருவது போலவே எண்ணி விருந்து படைக்க வேண்டும் என்பதை

**"பலநாள் பயின்று பலரொடு செல்லினும்**
**தலைநாள் போன்ற விருப்பினர்"**

***(புறம்: 101)***

என்ற புறப்பாடல் மூலம் அறியலாம்.

இரவில் விருந்தினர்கள் வந்தாலும் ஒரு மனைவியானவள் தன் கணவனுடன் சேர்ந்து விருந்து படைக்க வேண்டும் என்பதை

**"அல்இல் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே"**

என்ற நற்றிணைப் பாடலடி குறிப்பிடுகின்றது.

**"மனைமுதல் வினையொடும் உவப்ப**
**நினைமாண் நெஞ்சம் நீங்குதல் மறந்தே"**

***(அகம்:51)***

பெருந்தேவனார் பாடிய இப்பாடலில் விருந்தோம்பலை "இல்வாழ்க்கைத் தொழில்" என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு விருந்தோம்பல் பண்பு இல்லற அறமாக அகநானூற்றில் காட்டப்பட்டுள்ளது.

### காதல் அறம்

மனித நேயத்தின் அடிப்படையாகத் திகழ்வது ஈகைப்பண்பு. வறியவர்க்குக் கைமாறு கருதாது கொடுக்கும் உதவியே ஈகை எனப் போற்றப்படுகிறது. உலகத்தார் போற்றும் அறங்களில் சிறந்தது ஈதல் அறம்.

மலைபடுகடாமின் பாட்டுடைத் தலைவன் நன்னன் தன்னை நாடி வரும் இரவலர்களை விருந்தினர்களைப் போல் கவனித்து முதல் நாள் விருந்து கொடுப்பது போன்று எத்தனை நாள் தங்கினாலும் விருப்பத்துடன் தருவான் என்று அவனின் உண்டிக்கொடை சிறப்பிக்கப்படுகிறது.

**"தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து**
**புலநாள் நிற்பினும் பெறுகுவீர்"**

***(மலைபடு : 565 – 566)***

என வரும் பாடலடிகள் விருந்தோம்பல் பண்பில் தமிழர்கள் சிறந்து இருந்தனர் என்பதை விளக்குகின்றன.

பொருநராற்றுப்படையில் கரிகால் வளத்தானின் கொடைத்தன்மை விளக்கப்படுகின்றது. தன்னை நாடி வந்த கலைஞர்களுக்கு அரசன்

**"துடிஅடி அன்னதூங்குநடைக் குழவியொடு**
**பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்க"**

***(பொருந : 125 – 126)***

உண்டிக்கொடை, விலங்குக்கொடை, ஊர்திக்கொடை, பொற்கொடை, நிலக்கொடை என ஐவகையான கொடைகளைக் கொடுத்து தம்மை வந்தடைந்த வறுமையுற்ற புலவர்களை ஆதரித்து உணவளித்து, உடுக்க உடை கொடுத்துப் பன்னாளுக்கும் போதிய பரிசில் பொருள்களை வழங்கி வழியனுப்பியுள்ளான்.

ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவது தான் உண்மையான மகிழ்ச்சி. அதாவது தன் மகிழ்ச்சியை மறப்பதுதான் மகிழ்ச்சி. இதனை

**"செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்போம் எனினே தப்பு பலவே"**

***(புறம் : 189 : 7 – 8)***

**"இல்லென விரந்தோர்க் கொன்றீயாமை யிழிவெனக்**
**கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொருளாகுமே"**

***(கலி : பாலை : 1:15-16)***

எனவரும் பாடல்வரிகள் வாயிலாக ஈயாமை இழிவு எனவும்,ஈதலே உயர்வு எனவும் வலியுறுத்தப்படுவதுடன் நாம் வாழ்வில் ஏற்றம் காண்பதற்கு தன்னிடம் இருப்பதைப் பிறருக்கும் கொடுக்க வேண்டும் எனக் கலித்தொகை போதிக்கிறது.

**போர் அறம்**

அரசன் போர் செய்யத் தொடங்கும் முன் அந்நாட்டில் வாழும் பசு, பெண்கள், நோயுற்றோர், அந்தணர் ஆகிய அனைவரும் பாதுகாப்பான இடத்திற்கு செல்லுங்கள் என்றும், நான் விடக்கூடிய அம்புகள் அவர்கள் மீது பட்டு இறந்து விட வேண்டாம் என்றும் அறிவிப்பு செய்கின்றான். இதன் மூலம் உயிரைக் காத்தல் அரசனின் கடமையாகக் கருதுகின்றனர் என்பதைனைக் காட்டுகிறது. இதனையே

**"ஆவும் ஆனியல் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை வீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போல் புதல்வர் பெறாஅ நீரும்"**

***(புறம் : 9)***

என்பதன் மூலம் அரசர்கள் அறவழியைக் கூறும் கொள்கையாளர்களாகவும், அதற்கேற்ற வீரத்தையும் உடையவராகத் திகழ்ந்து அறநெறிப்படி வாழ்ந்துள்ளனர் என்பதனை புலவர் நெட்டிமையார் உணர்த்தியுள்ளர்.

தன்னை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவுர்மூலங்கிழார்

**"எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்**
**எதிர்சென்று எறிதலும் செல்லான்"**

***(புறம் : 301)***

என்று குறிப்பிட்டுள்ளார்.

**அன்பே அறம்**

அன்பே வாழ்வின் ஆதாரமாகும் பொருளை விடவும் அன்பு சிறந்ததாகும். கலித்தொகையில் அன்பு பலவாறு எடுத்துக் காட்டப்படுகிறது.

**"அன்பு கொள மடப்பெடை அசைஇய வருத்தத்தை**
**மென்சிறுகரால் ஆற்றும் புறவுஎனவும்**
**உரைத்தனரே"**

***(கலித்தொகை: பாலைக்கலி : 3-6)***

எனவரும் பாடல்களின் மூலம் அன்பின் தன்மை வெளிப்படுகின்றது. இதனையே உண்டுவரும்

**"அறத்திற்கே அன்புசார் யென்ப அழியார்**
**மறத்திற்கும் அஃதே துணை."**

***(குறள் : 76)***

அறம் செய்வதற்கு அன்பு துணையாக உள்ளது என்று அறியாதவர் கூறுவர். ஆனால் தீமையை ஒழிப்பதற்கும் அதுவே துணையாகும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

இருவர் இணைந்து வாழும் வாழ்க்கையில் அன்பு என்ற ஒன்று இல்லாமல் போனால் உப்பில்லா உணவு பயனற்றதாகி விடுமோ அதுபோல வாழ்க்கையும் பயனற்றதாகிவிடும். எனவே ஆண், பெண் ஆகிய இருவரும் இணைந்து வாழும் இல்லற வாழ்விற்கு அவசியம் அன்பு என்ற ஒன்றே இதனை

**"முயங்காக்காற் பாயும் பசலைமற் றூடி**
**ஊயங்காக்கால் உப்பின்றாம் காமம் வயங்கோதம்**
**நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண்சேர்ப்ப**
**புல்லாப் புலப்பதோர் ஆறு"**

***(நாலடி : 391)***

என்று இப்பாடல் வாழ்வியல் தத்துவமாகிய வாழ்வியல் அறத்தை உணர்த்துகிறது.

**பகிர்ந்துண்ணும் தன்மை**

நமக்கு கிடைத்தவற்றைப் பிறருக்குக் கொடுத்து வாழ்வதே சிறந்த அறமாகும், சிறந்த வாழ்வுமாகும்.

அறநூல்களில் உணர்த்தப்படும் அறங்களில் தலையாய அறம் பகுத்துண்டு வாழ்வதே

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை"**

***(திருக்குறள் : 322)***

என்று வள்ளுவர் அழகுபடக் கூறியுள்ளார்.

ஆதியனைப் பற்றி குறிப்பிடுகையில் அதியன் குறைவாகப் பெற்றாலும், நிறைவாகப் பெற்றாலும் பகிர்ந்து உண்ணும் மனித நேயத்தை உடையவன் என்பதை

**"சிறியகட் பெறின் எமக்கேயும் மன்னே!**
**பெறியகட் பெறினே,**
**யாம் படைத் தம் மகிழ்ந்து உண்ணும் மன்னே!**
**சிறு சோற்றனும் இனிபல கலந்தன மன்னே!**
**பேறச் சோற்றாலும் நனில் சலத்தன மன்னே!**

***(புறம் - 235)***

இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இந்நிகழ்வு அதியன் இறந்த போது ஔவை போற்றிப் பாடுவதாய் அமைந்துள்ளது.

## முடிவுரை

மனம், புத்தி, சித்தம் ஆகிய அகநிலை உறுப்புகளை அன்பில் தோயச் செய்து யார்மாட்டும் அன்புடையராய் வாழ்வதே அறம் ஆகும். வாழும் உயிர்க்கு அறத்தை விட நன்மையாவது ஏதுமில்லை என்கிறது குறள். அதனால் தான் இல்லறம் துறவறம் என இருவேறு வாழ்க்கை முறையிலும் அறம் விடாது பற்றிக் கிடக்கிறது. ஆதலால் அறம் செய விரும்பு.

## துணை நூற்பட்டியல்

1. புறநானூறு-புலியூர் கேசிகன் உரை, அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை ஐ.ப 1996.
2. நச்சினார்க்கினியர்- கலித்தொகை மூலமும் உரையும், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட் 522, டி.டி.கே சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை 2007.
3. பேராசிரியர் முனைவர் நா சுப்பு ரெட்டியார், தமிழ் இலக்கியங்களில் அறம் -நீதி முறைமை, தேன்மழைப் பதிப்பகம், 34 கொத்தவால் தெரு, சென்னை 16.
4. முனைவர் இரா. பரமேஸ்வரி -திருக்குறள் ,, ஸ்ரீ கோமதி பதிப்பகம், சென்னை -5
5. சங்க இலக்கியம்- ச.வே .சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
6. சங்க இலக்கியம் மூலமும் உரையும் - பத்துப்பாட்டு, ச.வே.சுப்பிரமணியன், உத்தமானன் பதிப்பகம், 21 ,ராமகிருஷ்ணா தெரு, சென்னை -.17.